# இலக்கு

இதழ் 64

வாராந்த மின்னிதழ்

பெப்ரவரி 09, 2020

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## ஈழத்திரையுலகின் இமயம் எம் முல்லையூர் யேசுதாசன்...

-காந்தள்-

## போரில்லா நிலையிலும், பொருளாதார நெருக்கடியிலும் படைத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு ஏன்?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்






## இழுத்து மூடும் துர்ப்பாக்கிய நிலையில் வவுனியா சின்னத்தம்பனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

கோ- ரூபகாந்

## பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் ஊடாக புலம்பெயர் மக்கள் தங்கள் நிதிகளை வழங்க வேண்டும்




வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் தலைவர் **ஜெயராஜா ஜெயதீபன்**



## தமிழரின் திறமையையும், தமிழ் தொன்மையையும் எடுத்துரைக்கும் தஞ்சை பெருவுடையார்

கல்யாணி





தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

## கொரோனா வைரஸ் – 724 பேர் மரணம், 34,000 இற்கு மேற்பட்டோர் பாதிப்பு




சீனாவின் வூகன் மாகாணத்தில் இருந்து ஆரம்பமாகி வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் இன் தாக்கத்திற்கு இதுவரையில் 780 பேர் பலியாகியுள்ளதுடன், 38,000 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைரஸின் பாதிப்பானது 2000 ஆம் ஆண்டுகளில் பரவிய சார்ஸ் எனபப்படும் வைரஸ் இன் பாதிப்பபை விட அதிகமானது.

சீனாவின் குபேய் மாகாணத்தில் 81 பேர் நேற்று (08) இறந்துள்ளனர். அதே சமயம் யப்பான் மற்றும் அமெரிக்காவை சேர்ந்தவர்களும் தலா ஒருவர் இந்த நோயின் தாக்கத்தால் இறந்துள்ளனர்.

சார்ஸ் வைரசின் தாக்கத்தால் 774 பேர் ஒரு வருட காலப் பகுதியில் பலியாகியிருந்தனர், ஆனால் கொரோனா வைரஸ் இன் தாக்கத்தால் குறுகிய காலத்தில் 780 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## போர்க் குற்றங்களை மேற்கொண்ட பிரித்தானியா நிறுவனம் தண்டிக்கப்பட வேண்டும் பிரித்தானியா தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை



சிறீலங்காவில் போர் இடம்பெற்ற போது சிறீலங்கா அரசுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக போர்க் குற்றங்களை புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட தமிழ் அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் இந்த கோரிக்கை தொடர்பான கடிதத்தை கொன்சவேட்டிக் கட்சிக்கான பிரித்தானியா தமிழர், இனப்படுகொலையை தடுப்பதற்கான அனைத்துலக மையம், பேர்ள், தமிழர் கல்விசார் ஜேர்னல், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தொழிலாளர் கட்சிக்கான தமிழர், தமிழ் தகவல் மையம், தமிழ் இளையோர் அமைப்பு, நாடுகடந்த தமிழீழ அரசு, இனஅழிப்புக்கு எதிரான அமைப்பு, உலகத் தமிழர் வரலாற்று அமைப்பு ஆகிய அமைப்புக்கள் இணைந்து கையளித்துள்ளன.

1980 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் சிறீலங்கா அரசுடன் இணைந்து பிரித்தானியா வைத் தளமாகக் கொண்ட கினி மினி என்ற தனியார் அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளனர். அதற்கான ஆவணங்களை பில் மில்லர் வெளியிட்டுள்ளார்.

வைன் குவளைகளில் வைத்து கைக் குண்டுகளை பொதுமக்கள் மீது வீசியதாக சிறீலங்காவுக்கான பிரித்தானியாவின் தூதரக பாதுகாப்பு ஆலோசகராக இருந்த லெப். கேணல் றிச்சாட் கொல்வோர்தி மில்லருக்கு தெரிவித்துள்ளதாக த கார்டியன் நாளேடு தெரிவித்துள்ளது.

பிரித்தானியா நிறுவனம் இவ்வாறான போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளது. எனவே இது தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் பிரித்தானியா அலுவலகம் தாமதமின்றி நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் அமைப்புக்கள் தமது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளன.

## ஜெனீவா கூட்டத்தொடர் – தமிழ் மக்களின் இராஜதந்திர அணுகுமுறை தொடர்பில் தெளிவற்ற தன்மை



ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் நாளில் இருந்து மார்ச் மாதம் 20 ஆம் நாள் வரையிலும் ஜெனீவாவில் இடம் பெறவுள்ளது.

இந்த கூட்டத் தொடரில் சிறீலங்கா அரசு மீது முன்னர் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஆராயப்படுமா? என்ற கேள்விக்கான விடை தெளிவற்றதாகவே உள்ளது.


மனித உரிமைகள் ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டு சிறீலங்கா மீது கொண்டுவந்த தீர்மானம் தொடர்பில் முன்னைய அரசு நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் தற்போதைய அரசு அதனை கைவிடத் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில் இந்த தீர்மானம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகின்றது என்ற கேள்விகள் தமிழ் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

இந்த தடவை தலைவருக்கான வாய்ப்பு மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அது ஒஸ்ரியாவின் ஐ.நாவுக்கான ஜெனீவா பிரதிநிதி திருமதி எலிசபத் றிசி பிஸ்பேர்க்கிற்கு வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

47 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இந்த சபையில் 13 ஆசிய நாடுகளும், 13 ஆபிரிக்க நாடுகளும், 8 லத்தீன் அமெரிக்க நாடுகளும், 7 மேற்கு ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

வழமை போல புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஜெனீவாவை நோக்கி நீதிக்கான போராட்டங்களை ஆரம்பித்துள்ள போதிலும் அவர்கள் இராஜதந்திர ரீதியாக என்ன அணுகு முறைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது தொடர்பில் தமிழ் மக்களிடம் தெளிவற்ற தன்மையே காணப்படுவதாக ஐரோப்பாவை தளமாகக் கொண்ட இராஜதந்திர அவதானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் 13 ஆவது திருத்தம் தொடர்பில் மகிந்தா - மோடி பேச்சு



இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சிறீலங்கா பிரதமரும் சிறீலங்கா அரச தலைவரின் சகோதரருமான மகிந்த ராஜபக்சாவிடம் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் பயணமாக புதுடில்லி சென்றுள்ள சிறீலங்கா பிரதமர் இந்திய தலைவர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த பேச்சுக்களின் போது தமிழக மீனவர்கள் சிறீலங்கா கடற்பரப்பில் மீன் பிடிப்பது தொடர்பில் சிறீலங்கா பிரதமர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால் சிறீலங்கா அரசு தமிழ் மக்களுடன் இன நல்லிணக்கப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்சா தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பில் பரந்துபட்ட பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என்று மட்டும் தெரிவித்து இந்திய பிரதமரின் கோரிக்கையை புறம் தள்ளியுள்ளார்.

இதனிடையே, ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் தமக்கான ஆதரவுகளை தேடுவதே மகிந்தாவின் இந்திய பயணத்தின் நோக்கம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஈழத்திரையுலகின் இமயம் எம் முல்லையூர் யேசுதாசன்...



புழுதி படிந்த கால்களோடு
புன்னகை முகம்காட்டி
அழுதுவடித்த கண்ணீர் துடைத்து
அரவணைக்கும் அன்பாலெமை
எழுதி வடித்த சித்திரங்களால்
அடிதொழா எம் அன்னைமண் பற்றி அன்பினால்
இணைந்த மைந்தனே சாமி...

குருதி குளித்த போர் மண்ணின்
கொள்கைத் திடம் பற்றிப்
பொருதி நின்றாடிய
உறுதி படைத்த மனிதருள் துணையாய்
உலாவந்தவர் நீங்கள்...

குறுஞ்சிரிப்புகளைக்கூட கண்டறியாக்
கூற்றுவன் நின்றாடிய பூமியில், நிந்தன்
குறும்படங்களால் குதூகலப்படுத்திய கலைத்தாயின்
புதல்வன்...

பாசறைகளிலிலேனும்,
பள்ளிக்கூடங்களிலேனும்
புன்னகைப்பூ மலர்வித்துப்
புதுமைகள் பலசேர்த்த
புத்துணர்வுத் தத்துவம் நீங்கள்..

தேசமலர்வொன்றே திடமென்று
நம்பித் தெருக்கோடிவரையிலும் நின்று
வாசமலர்களாய்ப்பூத்து விடுதலைபாடியாய்
வலம்வந்தவர் நீங்கள்...

கூட்டிலிருந்து வீழ்ந்த
குருவிக் குஞ்சுகளாய் - நாம்
ஒவ்வோர் மூலையில்
முனகிக்கிடக்கையில்- தாய்
நாட்டைவிட்டகலா மண்ணின் மைந்தராய் மண்ணை
முத்தமிட்ட வரம்பெற்றுவிட்டீர்கள்...

பேசுவாரற்றுக்கிடந்த எம் தேசவரலாறுதனை,
யேசுதாசன் போன்ற காலச்சிற்பிகளாலேயே
செதுக்கப்படுகின்றன...
காலம் நகர்ந்தாலும் காலத்தால் அழியாத மகத்தான
மாந்தருமை என்று நாம் இனிக்காண்போம்.....

**-காந்தள்-**

# ஐ.நா. காட்டிய வழியில் ஈழத்தமிழ் இளைஞர்களே எழுந்து நில்லுங்கள்

இலங்கையில் தேசிய குணமாக்கலுக்கும், உறுதிப்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் ஆணைக்குழுவிற்கு 2015இல் சிறீலங்கா அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றுவதற்கான கால அட்டவணையினை உருவாக்குவது அவசியமென, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் முக்கிய உறுப்பு நாடுகளான கனடா (Canada ), யேர்மனி (Germany), வடமசிடோனியா (North Macedonia), மொன்டினிகுரோ (Montenegro), ஐக்கிய இராச்சியம் (United Kingdom) ஆகியன, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவில், தீர்மானம் நிறைவேற்றியிருந்ததை உலகறியும்.

ஆனால் சிறீலங்காவில் கடந்த நவம்பர் மாதத்தில் கோத்தபாயா புதிய அரச தலைவராக வெற்றி பெற்றதன் பின்னர், இராணுவ ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்த பொழுது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் "இந்நியமனம் நினைத்த மாதிரியாகத் தண்டனைகளை நிறைவேற்றும் அபாயத்தைத் தொடர்ந்தும் வளர்ப்பதினால், சமூகங்களுக்கு இடையிலும், இனங்களுக்கு இடையிலும் வன்முறைகளை வளர்த்து உறுதிப்பாடின்மையை உருவாக்கும்" என எச்சரிப்புச் செய்தும், சிறீலங்கா அரசாங்கம் தனது முடிவில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை.

சிறீலங்கா அரசாங்கம், ஐக்கிய அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும், ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்களுடனும், கொண்டுள்ள இராணுவ மற்றும் பாதுகாப்பு கூட்டுறவுகள் இந்த நியமனத்தால் குறைவடையும் என ஐக்கிய அமெரிக்கா எச்சரிப்பு விடுத்தும், சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் அசைந்து கொடுக்கவில்லை.

மனித உரிமைகளுக்கும் தொழிலாளர் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கப்படும் பட்சத்திலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தை மேம்பாட்டுக்கான GSP வரிச்சலுகை அளிக்கப்படலாம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மற்றைய வெளிநாட்டுப் பங்காளர்களைப் போலவே சிறீலங்காவின் மனித உரிமைகள் துஸ்பிரயோகங்களில் தங்கள் பொறுப்பை வெளிப்படுத்தாது அமைதி காத்துக் கொண்டன.

இந்தப் போக்குகளை 2020ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் கண்காணிப்பக உலக அறிக்கை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. இவ்வாறு உலக நாடுகளினதும் அமைப்புக்களதும் மனித உரிமைகள் குறித்த இந்த பொறுப்பற்ற முறையான அமைதிப் போக்கும், தமிழக சட்டசபை கோரிக்கை விடுத்தும் இந்திய மத்திய அரசு இந்த விடயத்தில் காட்டிய அலட்சியப் போக்கும், உரிய காலத்துள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் ஒழுங்காற்றுப்படுத்தலை வேகப்படுத்த முடியாமல் செய்தன – செய்கின்றன.

இந்த அனைத்துலகினதும் பக்கசார்பான ஆதரவின் விளைவாக தற்போது இலங்கையில் உள்ள அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் வழிகாட்டல்களை மட்டுமல்ல, தாயக, தேசிய, தன்னாட்சி உரிமை கொண்ட சிங்கள தமிழ் தேச இனங்களினதும் பின்னர் வரலாற்று வளர்ச்சியில் அங்கு குடிகளாக வாழும் முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களை உள்ளடக்கிய பல்லின மக்களினதும் பல்கலாச்சாரத்தினதும் நாடு இலங்கை என்ற நடைமுறை புவியியல் அரசியல் உண்மையையே மீறியுள்ளது.

பௌத்த சிங்கள நாடாகையால் சிங்களத்திற்கும் பௌத்த மதத்திற்குமே முன்னுரிமையல்ல முதன்மை அளிக்கப்படும் என இன்றைய அரசாங்கம் துணிகரமான அறிவிப்பைச் செய்துள்ளது. இந்த சிங்கள பௌத்த பேரினவாத அறிவிப்பை ஏற்று அங்குள்ள இன மதக் குழுமங்கள் இரண்டாந்தரக் குடிகளாக வாழ இணங்கினால் அவர்கள் தங்களின் சமுக பொருளாதார வாழ்வுகளைத் தொடர அரசாங்கம் உதவும். இதுவே அரச அதிபர் நாட்டின் எல்லா மக்களுக்கும் அதிபர் என்ற கோத்தபாயாவின் விளக்கம் என்பதையும் இலங்கை அரசாங்கம் உறுதியாகவும் இறுதியாகவும் எடுத்துரைத்துச் சிங்கள பௌத்த பேரினவாதம் இலங்கையில் தன்னை முழுமைப்படுத்திக் கொள்ள உதவியுள்ளது. இந்த அறிவிப்பில் குழுமம் என்ற சொல்லைக் கையாண்டு இனத்துவச் சிறுபான்மை என்ற தகுதியும் அதற்கான உரிமைகளும்கூட தமிழர்களுக்கு இனி இல்லையென மிக நுணுக்கமான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை 10.12.2019இல் அனைத்துலக மனித உரிமைகள் தினத்தில் "இளைஞர்களே மனித உரிமைகளுக்காக எழுந்து நில்லுங்கள்" என்று விடுத்த அழைப்பையே, 'இலக்கு', ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு தாயகத்திலும், தமிழகம் உட்பட உலகத் தமிழ் இளைஞர்களுக்கும் விடுக்க விரும்புகிறது. இளைய தமிழர்களே இனி தமிழர்களின் மனித உரிமைப் பாதுகாவலர்கள் நீங்கள்தான். காலதாமதம் செய்யாது, சிந்தித்து, சனநாயக வழிகளில், அணிவகுத்து, ஓரணியாக எழுந்து நில்லுங்கள். ஈழத்தமிழர்களின் மனித உரிமைகள் நிச்சயம் மீளும்.

***- ஆசிரியர்***



# இழுத்து மூடும் துர்ப்பாக்கிய நிலையில் வவுனியா சின்னத்தம்பனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

கோ- ரூபகாந்

வவுனியா மாவட்டம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகர் பிரிவுக்கு உட்பட்ட சின்னத்தம்பனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. 1957ஆம் ஆண்டு மக்களின் முயற்சியில் ஓலைக் கொட்டில்களில் ஆரம்பிக்கப்பட்டது.

1960.10.29 அன்று சின்னத்தம்பனை பாடசாலையை இலங்கை அரசு பொறுப்பேற்று, சின்னத்தம்பனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாக இயங்கி வந்தது.



1984ஆம் ஆண்டு நாட்டில் இடம் பெற்ற வன்செயல் காரணமாக சின்னத்தம்பனை மக்கள் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்தனர். அப்போது பாடசாலை மூடப்பட்டது. பின்னர் 1990ஆம் ஆண்டு கிராமத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்து பாடசாலை சிறப்பாக இயங்கி வந்தது. தொடர்ந்து நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக மீண்டும் பாடசாலை மூடப்பட்டு மக்கள் இடம் பெயர்ந்தனர்.

2001ஆம் ஆண்டு சின்னத்தம்பனை கிராம மக்கள் மீண்டும் கிராமத்தில் மீள்குடியேறினர். அதன் பின் 2002.01.04 ஆம் திகதி ஓலைக் கொட்டில்கள் அமைத்து கொட்டில் வகுப்பறையில் சுமார் 40 தொடக்கம் 50 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.


2013.12.15ஆம் திகதி எஸ்.மரியநாயகம் என்பவர் பாடசாலை அதிபராக நியமனம் பெற்று 75 மாணவர்களுடன் பாடசாலையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வந்தது.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்க சின்னத்தம்பனை பாடசாலையில் இன்று இரண்டு மாணவர்கள் மாத்திரமே கல்வி கற்று வரும் துர்ப்பாக்கிய நிலையில், பாடசாலை இழுத்து மூடும் அபாய நிலை இருப்பதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த காலங்களில் செட்டிகுளம் பெரிய புளியங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் 2010ஆம் ஆண்டு காண்டைக்குளம் திருநாவுக்கரசு வித்தியாலயமும் மாண வர்கள் வருகை குறைவால் இழுத்து மூடப்பட்ட சம்பவமும் பதிவாகியுள்ளது.

சின்னத்தம்பனை கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத காலத்தில் சிறப்பாக இயங்கி வந்த பாடசாலை, தற்போது நிரந்தர வகுப்பறைக் கட்டடங்கள், மலசலகூட வசதி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, என அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடியிருந்தும் மாணவர்கள் வருகை மிகக் குறைந்துள்ளமையால் கல்விக் கூடம் மூடப்படும் நிலையில் உள்ளது.

அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஆவலுடன் அதிகாலையில் எழுந்து பாடசாலைக்கு வருகை தந்தால், இரண்டு மாணவிகள் மாத்திரமே பாடசாலைக்கு வருகின்றனர். இந்நிலையில் ஒவ்வொரு நாளும் புதிதாக மாணவர்கள் பாடசாலையில் இணைவார்கள் அவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்துடனேயே வீடு திரும்புகின்றனர்.




வகுப்பறையை சுத்தம் செய்தல், பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றுதல், முற்றம் கூட்டுதல் உட்பட அனைத்து வேலைகளையும் ஆசிரியர்களும் அதிபரும் இணைந்தே செய்கின்றனர்.

சின்னத்தம்பனை கிராமத்தில் உள்ள பாடசாலையில் ஏன் பெற்றோர்கள் அக்கறை செலுத்தவில்லை.?

கிராமத்தில் இயங்கும் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் நிலையில் இருக்கும் சுமார் 40 தொடக்கம் 50 மாணவர்கள் கிராமத்தில் இருக்கும் பாடசாலையில் கல்வி கற்காமல் ஏன் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் பாடசாலைக்குச் செல்கின்றார்கள்?

சின்னத்தம்பனை பாடசாலை உயிர்ப்புடன் மீள் எழுச்சி பெற்று கிராமத்தின் கல்வி வளர்ச்சிப் பாதையை நோக்கி கொண்டு செல்ல வேண்டிய கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் ஏன் மௌனமாக இருக்கின்றார்கள்.?

கிராமத்தின் அழியாத கல்விச் சொத்தை கட்டிக் காப்பாற்ற வேண்டிய கிராம மக்கள் ஏன் பாடசாலையில் தமது வெறுப்பைக் காட்டுகின்றனர் என பல கேள்விகள் எழுகின்றது. இந்த விடயம் தொடர்பில் வவுனியா தெற்கு கோட்டக் கல்வி அதிகாரியை எமது இலக்கு செய்திப்பிரிவு தொடர்பு கொண்டு வினவியது.

ஆதற்கு பதில் வழங்கிய கோட்டக்கல்வி அதிகாரி முத்து ராதாகிருஸ்ணன், வவுனியாவில் செட்டிகுளம் பிதேசத்தில் பல கிராமப் பாடசாலைகளில் மாணவர்களுடைய வரவு கணிசமான அளவு குறைந்து கொண்டு செல்கின்றது.

வகுப்பறையை சுத்தம் செய்தல், பூஞ்செடிக ளுக்கு நீர் ஊற்றுதல், முற்றம் கூட்டுதல் உட்பட அனைத்து வேலைகளையும் ஆசிரியர்களும் அதிபரும் இணைந்தே செய்கின்றனர்.

நவநாகரீக உலகில் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்றால் சிறந்த பெறுபேறுகளை பெற முடியும் என மக்கள் நினைக்கின்றார்கள். இதன் காரணத்தினால் ஊரில் இருக்கும் பாடசாலைகளில் மாணவர்கள் பிரசன்னம் குறைவாகவே காணப்படுகின்றது.

அந்த வகையில் வவுனியா சின்னத்தம்பனை பாடசாலையில் தற்போது இரண்டு மாணவர்களே கல்வி கற்கின்றனர். அவர்களுக்காக அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந் நிலையில் பாடசாலையை தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், கிராமத்து பொது அமைப்புக்கள் என பலரிடம் பலமுறை கூட்டம் கூடிக் கதைத்தும் ஒருவிதமான பயனும் கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் சின்னத்தம்பனை கிராமத்தில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களுக்கும் கல்றல் செயற்பாடுகளுக்கு ஏற்ற சூழலாக சின்னத்தம்பனை பாடசாலை அமையவில்லை. எனவே மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு குறித்த இரண்டு மாணவர்களையும் அயல் கிராமத்தில் அமைந்திருக்கும் வீரபுரம் பாடசாலையில் இணைத்து கல்வி புகட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றோம்.

சின்னத்தம்பனை பாடசாலைக்கு மாணவர்கள் வரவு அதிகரிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் சின்னத்தம்பனை பாடசாலை இயங்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்தார்.



# பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் ஊடாக புலம்பெயர் மக்கள் தங்கள் நிதிகளை வழங்க வேண்டும்

வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் தலைவர் **ஜெயராஜா ஜெயதீபன்**

**வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், புலம்பெயர்ந்த மக்கள் தங்கள் நிதிகளை எவ்வாறு சரியான முறையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு வழங்க வேண்டும் என்பது தொடர்பாகவும் வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையத்தின் தலைவர் ஜெயராஜா ஜெயதீபன் அவர்கள் இலக்கு இணையத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

**கேள்வி:**

**போர்க் காலத்திலும், போர்க் காலத்திற்கு பின்னரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளது?**

**பதில்:**

போர்க் காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் அநேக விடயங்களில் ஈடு பட்டு வந்தவை. குறிப்பாக அரசாங்கத்துடன் இணைந்து, அரசாங்கத்திற்கு பக்கபலமாக பல பங்களிப்பை செய்து வந்திருக்கின்றன. போர் முடிவடைந்து மக்கள் மீள்குடியேற்றப்பட்டுக் கொண்டிருந்த சமயம் பெரும் சவால்களுக்கு மத்தியில் பாரிய நடவடிக்கைகள் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தி ருந்தன.

போர்க் காலத்தில் இரண்டு தரப்பினருக்குமிடையில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. போர் முடிவடைந்த பின்னர் முற்றுமுழுதாக அரசாங்கத்தின் துணையுடன், அரசாங்கத்தின் வழிகாட்டலில் அரசாங்கத்திற்கு பக்கபலமாக அநேக வேலைத் திட்டங்களை மேற்கொண்டது என்பதை கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**கேள்வி:**

**தற்போதைய காலகட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்தப் பாதையை நோக்கி செல்கின்றது?**

**பதில்:**

போர் முடிவடைந்த பின்னர் மக்கள் மீளக் குடியேறி ஓரளவு அடிப்படை வசதிகள் என்றாலும் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் தனித்து நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை நோக்கி செல்லக்கூடிய வேலைத் திட்டங்களை கட்டா யம் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டில் இருக்கின்றன.

அரசாங்கத்துடன் இணைந்து தங்கள் பணிகளை மேற்கொண்டிருந்தாலும் இன்னும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வேலை செய்ய வேண்டிய ஒரு நிலைப்பாடும் அதேநேரம் உரிமைகள் சம்பந்தமாக வேலை செய்ய வேண்டிய கடப்பாடும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இருக்கின்றது.

**கேள்வி:**

**அரசியற் கைதிகளின் நிலவரம், காணாமற் போனோர் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?**

**பதில்:**

காணாமல் போனவர்கள் விடயம் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நல்ல நோக்கமாக இருந்தாலும், அவர்களின் போக்கு சரியான இலக்கிற்கு செல்லாது என்று அரச சார்பற்ற நிறுவனத்தினர்களாகிய நாங்கள் கருதுகின்றோம். வவுனியா மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு அதில் இருப்பதாக நான் கருதவில்லை.

**கேள்வி:**

**போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள், வாழ்வாதாரத் தேவைகள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் எவ்வாறான வேலைத் திட்டங்களை மேற் கொள்ள வேண்டும்?**

**பதில்:**

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல வாழ்வாதாரத் திட்டங்களை மேற்கொள்கின்றன. இருந்தாலும் அது சரியான வகையில் பயன்படுத்தப்படாத ஒரு நிலைப்பாடு, எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி சார்ந்த ஒரு வேலைத் திட்டத்தை மேற்கொள்வதென்பது அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒரு பணி என்பதை கூற விரும்பு கின்றேன்.

**கேள்வி:**

**யுத்தம் முடிவடைந்த பிற்பாடு அதிகளவான புதிய அரச சார்பற்ற நிறுவனங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதேபோல புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்களும் தங்கள் உறவுகள் அல்லது ஒரு பெயர்களை வைத்து அரச சார்பற்ற நிறுவனங்களை உருவாக்கி நேரடியாக மக்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த உதவித் திட்டங்கள் சரியாக போய் சேருகின்றனவா?**

**பதில்:**

அரச சார்பற்ற நிறுவனம் என்பது அரசாங்கத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் கீழும், அரச சார்பற்ற நிறுவன செயலகத்திலும் பதிவு செய்யப்பட்டு, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக வரும் நிதிகள் சீரான முறையில் செலவு செய்யப்படுகின்றது. அது திட்ட மிட்ட மக்களுக்கு கிடைக்கப் பெறுகின்றது என்பது உறுதி செய்யப்படுகின்றது. ஏனெனில் அரசாங்கமும் அதனை மேற்பார்வை செய்கின்றது. அரையாண்டிற்கு ஒருமுறை அதற்குரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அனுமதி பெறப்பட்டு, அரசாங்க அதிபரிடம் அனுமதி பெற்று அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சரியான ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து செரற்றீஸ் என்ற அமைப்பு மூலம் வரும் பணங்கள் உதவி செய்யப்படுவதாக பத்திரிகையில் செய்திகள் வெளியாகின்றன. எவ்வளவு பணம் வருகின்றது, யாரிடமிருந்து வருகின்றது, எங்கே வருகின் றது, எந்த வகையில் அது செலவு செய்யப்படு கின்றது என்பது தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்களாகிய எங்களுக்கு எந்தக் கருத்துக்களும் இல்லை. இவை தொடர்பாக அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு தொடர்புகளும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி:**

**புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாக்கப்படும் இவ்வாறான செரற்றீஸ் என்ற அமைப்பு சீரான முறையில் இயங்க வேண்டுமாயின் அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

**பதில்:**

செரற்றீஸ் என்று வரும் அமைப்புகள் அரசாங்கத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தில் இலாப நோக்கற்ற நிறுவனமாக பதிவு செய்ய வேண்டும். அப்படி பதிவு செய்யப்படுமிடத்து, அவர்களை நாங்களும் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஓர் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வோம். மாதாந்தம் அரச சார்பற்ற நிறுவனத்தில் நடக்கும் கூட்டங்களுக்கு அவர்களை அழைத்துக் கொள்வோம். அரசாங்க முன்னேற்றக் கூட்டங்கள், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து வரும் நிதிகள் சரியான முறையில் செலவிடப்படும், அல்லது பங்கிடப்படும் என்பதை உறுதி செய்து கொள்ளலாம்..

**கேள்வி:**

**போர் முடிந்த காலப் பகுதியில் புலம்பெயர் தேசங்களில் இருந்து வரும் நிதி மக்களின் வாழ்வாதாரத்திலும் சரி சுய நிர்ணயத்திலும், அரசியலிலும் பெரும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. அந்த நிதியை இங்குள்ள அமைப்புகள் எவ்வாறு கையாள வேண்டும்?**

**பதில்:**

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாகவே இங்கு கருத்தைத் தெரிவிக்கலாம். செரற்றீஸ் எங்களுடன் இணைந்து செயற்படாத காரணத்தினால், அவர்களுக்கு வரும் நிதி பற்றி கருத்துத் தெரிவிக்க முடியாது. ஆனால் அரச சார்பற்ற நிறுவனத்திற்கு வரும் நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை உறுதியாக கூறமுடியும்.

**கேள்வி:**

**புலம்பெயர் தேசத்திலுள்ள மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பாகவும் அவர்களின் மக்கள் நலத் திட்டங்கள் பற்றியும் நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில்:**

புலம்பெயர்ந்த மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிறைய உதவி புரிவதாக பத்திரிகைகள் வாயிலாகவும், செய்திகள் வாயிலாகவும் அறிகின்றோம். அதை பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு ஊடாக மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் விபரங்களை இணையத்தளத்தில் நீங்கள் பார்வையிடலாம். எந்தெந்த நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நிறுவனங்கள் ஊடாக நீங்கள் நிதியை வழங்கினால், நீங்கள் வழங்கும் நிதியும், நிதி வழங்கும் நோக்கமும் சரியான வகையில் இருக்கும் என் பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கேள்வி:**

**அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத்தின் சார்பாக நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?**

**பதில்:**

வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத்தின் வயது 20 வருடத்திற்கும் மேல். வவுனியாவில் உள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் எமது அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். உங்களால் வழங்கப்படும் எந்த நிதியாக இருந்தாலும், அது அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டும் என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பதை புலம்பெயர் மக்களுக்கும் நாம் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம்.

• • •

# அதிகரித்து வரும் இழப்புகள்
# அநாதரவாய் மக்கள்



கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை அழிவுகளில் பெரும் வேதனைகளையும் சோதனைகளையும் சுமந்த மக்களாக உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேச மக்கள் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் யானைகளின் தாக்குதலிலும் இழப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

போரதீவுப் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்கள் ஏனையவர்களைப் போல் சொகுசு வாழ்க்கை வாழவில்லை. என்றாலும் தானும் தனது குடும்பமும் என அன்றாடம் உழைத்தே வாழ்நாளைக் கடத்துகின்றனர்.

பல்வேறு வளங்களைக் கொண்டிருந்தாலும், வேளாண்மைச் செய்கைக்கு பெயர் போன இந்தப் பிரதேசம், வரலாறு காணாத பேரழிவுகளை சந்தித்திருக்கின்றது. இவற்றை எல்லாம் கடந்து தற்போதைய சூழ்நிலையில் காட்டு யானைகளின் அட்டகாசங்களும் அழிவுகளும் இவர்களை விட்ட பாடில்லை.

எல்லையோரக் கிராமங்களான பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை, நெல்லிக்காடு 35ஆம், 37ஆம், 38ஆம், 39ஆம், 40ஆம் கிராமங்கள், விவேகானந்தபுரம், திக்கோடை, தும்பங்கேணி, இளைஞர் விவசாயத் திட்டம், களுமுந்தன்வெளி புன்னைக்குளம், இறாணமடு போன்ற கிராமங்களிலேயே யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது.



யுத்த காலத்தில் எதுவித யானைப் பிரச்சினையையும் எதிர் கொள்ளாத இப்பகுதிகள் யுத்தம் முடிவடைந்த காலப் பகுதியில் இருந்து தொடர்ச்சியான யானை பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றன.

போரதீவுபற்று பிரதேச செயலகப் பகுதிகளில் யானையின் தாக்குதல்கள் காரணமாக சுமார் 1000இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 15இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு, 20இற்கும் மேற்பட்டவர்கள் தமது அவயங்களை இழந்துள்ளனர்.

போரதீவுபற்று பிரதேசத்தில் 43 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். விவசாயத்தினையும் கால்நடை வளர்ப்புகளையும் பிரதான தொழிலாகக் கொண்டுள்ள இங்குள்ள மக்கள், வீட்டுத் தோட்டம், கைத்தொழில், கோழி வளர்ப்பு, செங்கல் அரிதல், கூலிவேலை செய்தல் போன்ற இதர தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஐப்பசி தொடக்கம் மாசி மாதம் வரையான காலப் பகுதிகளில் பெரும்போக வேளாண்மைச் செய்கை, தோட்டச் செய்கை என்பனவற்றை பரந்த அளவிலும், சித்திரை தொடக்கம் ஆடி மாத காலப் பகுதிகளில் சிறுபோக வேளாண்மைச் செய்கையை குறைந்த அளவிலும் இந்தப் பிரதேச மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மேற்கொள்ளும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு காட்டு யானைகளால் தற்போது பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இங்குள்ள சிங்கள பகுதிகளில் யானைகளின் பிரச்சினைகளினால் அப்பகுதி சிங்கள மக்கள் பாதிக்கப்படாத நிலையில், தமிழ் பகுதிகளே யானையின் தாக்குதல்களினால் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் 35ஆம் கிராமத்தினைச் சேர்ந்த ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ரஞ்சன் என்பவர் இவ்வாறு கூறுகின்றார்.

"நாங்கள் எமது கிராமத்திலிருந்து சுமார் 10 தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்து பற்பல இடங்களில் வாழ்ந்து, இறுதியாக கடந்த 2007ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்துள்ளோம். பெருமளவிலான உயிர், உடமை இழப்புகளை எதிர் கொண்டுள்ளோம். தற்போது நாம் காட்டு யானைகளால் அவ்வாறான இழப்புகளை சந்தித்து வருகிறோம்.

இதுவரை எமது பகுதியில் 12 நபர்களை காட்டு யானைகள் அடித்துக் கொன்று இருக்கின்றன. 50இற்கு மேற்பட்ட வீடுகள் யானைகளினால் முற்றாக உடைக்கப்பட்டுள்ளன. இந்த நிலமை தொடருமாக இருந்தால், நாங்கள் யுத்த காலத்தில் எவ்வாறு இடம் பெயர்ந்தோமோ அது போல் காட்டு யானகளுக்கும் பயந்து இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும்" என தனது மன ஆதங்கத்தை மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

அப்பகுதியைச் சேர்ந்த கோ.பிரசாத் இவ்வாறு கூறுகின்றார்.

"நாங்கள் தற்போது யானைகளின் அட்டகாசத்தினால் படும் பாடுகளைப் பற்றி பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தலைவர், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வனஜீவராசிகள் திணைக்களம், அரசாங்க அதிபர் போன்ற பலருக்கும் அறிவித்தும் எமக்குரிய பயன் இதுவரை கிட்டவில்லை.

நாங்கள் கோருவது, யானைகள் கிராமத்திற்குள் உட்புகும் மையப் பகுதிகளைச் சுற்றி மின் வேலிகள் அமைத்துத் தர வேண்டும் என்பதுவே யாகும். ஆனால் வனஜீவராசிகள் திணைக்களம் இங்கு வந்து எம்மிடம் நான்கு ஐந்து யானை வெடிகளைத் தந்து விட்டுச் செல்கின்றார்கள். இவற்றை நாங்கள் பயன்படுத்தினாலும் யானைகள் எந்த பிரதிபலிப்பையும் காட்டுவதில்லை. இவற்றால் எந்த பயனுமில்லை.

இது இவ்வாறிருக்க, இப்பிரதேசம் வேளாண்மைச் செய்கைக்குப் பெயர் போனது. இங்குள்ளவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர் மரக்கறி தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள், தென்னைகள் என்பனவும் நெல் வயல்களும்

கிருஷ்ணா

மட்டுமன்றி விவசாயிகள் சேமித்து வைக்கும் நெல் மூட்டைகளையும் கூட யானைகள் அழித்து வருகின்றன.



காட்டு யானைகளின் தாக்குதல்களை இன்று எதிர் கொண்டு நிற்கும் போரதீவுப் பற்றுப் பிரதேச மக்கள் கடந்த காலங்களில் பெரிய வெள்ளம் அதனைத் தொடர்து சூறாவளி பின் யுத்தம் இவைகளனைத்திற்கும் முகம் கொடுத்து தற்பொழுது மெல்லமெல்ல மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கும் நிலையில், "மரத்தால் விழுந்த வனை மாடு ஏறி மிதிப்பது போல" தற்பொழுது யானைகள் கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களின் உயிர்களையும், உடமைகளையும், குடியிருக்கும் வீடுகளையும் அழித்து வருவது மிகவும் வேதனையான விடயமே.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 13 மாதங்களில் காட்டு யானைகளால் தாக்கப்பட்டு 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அதே காலப் பகுதியில் 10 யானைகளும் இறந்துள்ளன எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன என சுட்டிக் காட்டிய அவர், 2019ஆம் ஆண்டு யானைகளால் தாக்கப்பட்டு 10பேர் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், இவ்வாண்டு முதல் மாதத்தில் இருவர் யானைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த மனித - யானை மோதலைத் தடுக்கும் பொருட்டு, யானைகள் வரும் வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். யானை வேலிகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் பெரும்பாலான பகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும், மிகுதி பகுதிகளுக்கும் இந்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எது எப்படி இருப்பினும் இந்த அழிவு நடவடிக்கைகளை தடுப்பதற்கு உரிய கதியில் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றே மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது சாமானிய மக்களின் உயிர் பிரச்சனை. அவர்களின் வாழ்வாதரப் பிரச்சனை. வனவிலங்குகளின் வாழ்வுக்கான பிரச்சனையும் கூட. எனவே உரிய அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக அக்கறை கொண்டோர் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை உடன் முன்னெடுப்பது அவசியம்.

• • •



# அரசியலிலிருந்து ஒதுங்குவாரா ரணில்?

கொழும்பிலிருந்து **அகிலன்**

கட்சிக்குள் தொடரும் மோதல்களால் தன்னுடைய செல்வாக்கை இழந்து பலவீன மான நிலைக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்றிருப்பது தெரிகின்றது. மறு புறத்தில் பங்காளிக் கட்சிகளின் ஆதரவுடன், தலைமைப் பதவியையும் கைப்பற்றலாம் என்ற நம்பிக்கையுடன் காய் நகர்த்திக்கொண்டிருக்கும் சஜித், ஐ.தே.க. தலைமையிலான கூட்டணியை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண் டுவர முயல்கின்றார். இதன் ஒரு கட்டமாக கூட்டணியின் பொதுச் செயலாளராக தனது ஆதரவாளரான ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு அவர் எடுத்த நகர்வு ரணிலைக் குழப்பியுள்ளது.

இந்தக் குழப்பங்களால், கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ரணில் தலைமையில் சிறீகொத்தாவில் வியாழக்கிழமை செயற்குழுக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அது பிற்போடப்பட்டுள்ளது. கூட்டணி விவகாரம், குறிப்பாக அதற் கான அதிகாரம் மிக்க பதவியான பொதுச் செயலாளர் பதவி குறித்தும் இதன் போது முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும்.

சஜித் தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணி க்கான பொதுச் செயலாளரை நிய மிப்பது, கூட்டணியின் சின்னம், பெயர் என்பன தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என கட்சி எம்.பி ஒருவர் தெரிவித்தார். புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தனர். அவர் சஜித்தின் தீவிர ஆதரவாளர்.

ரஞ்சித் மத்தும பண்டாரவை பொதுச் செயலாளராக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பெயரிட்டார். இந்த முடிவுக்கு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக்குழு புதன்கிழமை அனுமதி வழங்கியது. பொதுச் செயலாளரைப் பெயரிடுவதற்கான அதிகாரம் சஜித்துக்கு வழங் கப்பட்டிருந்தாலும், அவரின் முடிவுக்கு கட்சியின் மத்திய குழுவின் அனுமதி அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. அதில்தான் ஒரு தடையைப் போடுவதற்கு ரணில் முற்படுகின்றார்.

எனவேதான் இவ்விவகாரம் பற்றி மேலும் ஆராயும் நோக்கில் ரணில் தரப்பால் செயற்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நவீன் அல்லது ரவி கருணாநாயக்க நியமிக்கப்படவேண்டும் என்பதே ரணில் தரப்பின் கோரிக்கையாக இருப்பதாகத் தெரிகின்றது. அதன் மூலமாக கூட்டணியின் வேட்பாளர் நியமனம், மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்கைச் செலுத்த முடியும்.

இதேவேளையில், கட்சிக்குள்ளும் கூட்ட ணிக்குள்ளும் ரணிலின் செல்வாக்கு பெருமளவுக்கு சரிந்தாலும், தன்னை நிலை நிறுத்துவதற்கான பல உபாயங்களை ரணில் கையாண்டு தோல் வியடைந்திருக்கின்றார். கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவியைத் தனது ஆதரவாளர் ஒருவருக்குப் பெற்றுக்கொடுப்பதில் அவர் தோல்வியடைந்தால், அவர் அரசியலிலிருந்து ஒதுங்கி விடுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.



இந்தப் பின்னணியில், அரசியலிலிருந்து அவரை கௌரவமாக ஒதுங்க வைக்கும் பல்வேறு திட்டங்கள் குறித்து பல மட்டங்களில் ஆராயப்படுவதாக ஒரு தகவல் கசிந்தது. ஊடகச் செய்தி ஒன்றிலும் இது வெளிவந்திருந்தது..

சர்வதேச அமைப்பு ஒன்றின் உயர் பதவிக்குச் செல்வதற்காகக் கட்சித் தலைமையிலி ருந்தும் உள்ளூர் அரசியலிலிருந்தும் அவர் விடை பெறுகின்றார் என்று காட்டுவதன் மூலம், நிலைமையைச் சமாளிப்பதற்குச் சில தரப்புகள் முயல்வதாகத் தெரிகின்றது. அந்த முயற்சிக்கு அரசுத் தலைமையின் அதாவது ராஜபக்ஷக்களின் ஆதரவும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் மட்டத்திலும், இராஜதந்திரிகள் தரத்திலும் ரணிலுக்கு நல்ல பெயர் உண்டு. அதனை ரணிலுக்கு மாத்திரமல்லாமல் நாட்டுக்கும் நற் பெயர் தரக்கூடியதாக மாற்றுவதில் தலைமைக்கு ஆட்சேபனை இல்லை என்றே கூறப்படுகின்றது. ஐ.நா., கொமன்வெல்த் அமைப்பு, ஐ.நாவின் உப அமைப்புகள், உலக வங்கி போன்ற ஒன்றில் பொறுப்பு வாய்ந்த பொருத்தமான பதவி ஒன்றை ரணிலுக்குத் தேடித் கொடுப்பதற்கு சார்பாக முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது.

ரணிலை அரசியலிலிருந்து ஓய்வு பெறச் செய்வதற்கான முயற்சிகள் இவ்வாறு ஒருபுறம் முன்னெடுக்கப்பட்டு வரும் அதே வேளையில், மறுபுறத்தில் வரப்போகும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தான் போட்டியிடப் போவதாக ரணில் தெரிவித்து வருவது சஜித் தரப்பை குழப்பியிருக்கின்றது.

அதிகளவு மக்கள் தொகையைக் கொண்டுள்ள கொழும்பு மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ரணில், அதிகூடிய விருப்பு வாக்குகளாக ஐந்து லட் சம் வாக்குகளைப் பெற்றிருந்தார். அது ஒரு சாதனையாகப் பதியப்பட்டுள்ளது. அந்த வாக்குகளில் இப்போதும் நம்பிக்கை வைத்துள்ள ரணில், இம்முறையும் தான் கொழும்பு மாவட்ட த்திலேயே போட்டியிடப் போவதாகச் சொல்லி வருகின்றார்.

கடந்த தேர்தல்களில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட சஜித், இம்முறை கொழும்பில் போட்டியிட விரும்புகின்றார். அம்பாந்தோட்டை ராஜபக்ஷக்களின் கோட்டை யாக இருப்பதால், அதிகளவு விருப்பு வாக்குகளை அவரால் அங்கு பெற முடியாது. அதனால், கொழும்பில் போட்டியிடுவதற்கு அவர் விரும்புகின்றார். கொழும்பு மத்திய தொகுதி தான் பிரேமதாசவின் கோட்டையாக இருந்தது. அத்துடன், கொழும்பு மாவட்டடம் மட்டும்தான் ஐ.தே.க. உறுதியாக வெற்றிபெறக் கூடிய ஒரு மாவட்டம்.

அதனால், கொழும்பில் போட்டியி டுவதன் மூலம் தமது செல்வாக்கை காட்டுவதற்கு சஜித் விரும்புகின்றார். இதற்குப் பிரச்சினையாக இருப்பவர் ரணில். இருவரும் களத்தில் இறங்கி னால் விருப்பு வாக்கு பெரும் போட்டியாக ஒருவாகும். ரணிலை ஓய்வு பெறச் செய்வதற்கான முயற்சியில் இறங் கியிருப்பவர்கள் இவற்றையும் கவனத்திற் கொண் டிருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

எப்படியிருந்தாலும் நாளை நடைபெற வுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டம் தீர்க்கமா னதாக இருக்கும். கூட்டணியின் பொதுச் செயலாளரை வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யலாம் என்ற யோசனை ரணிலால் முன்வை க்கப்படலாம் எனவும் தெரிகின்றது. ரணிலின் அரசியல் எதிர்காலம் என்ன என்பது நாளை தெரிந்துவிடும்.

# போரில்லா நிலையிலும்,பொருளாதார நெருக்கடியிலும்
# படைத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு ஏன்?

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**



பொருளாதார பலவீனம் சிறீலங்காவின் படை ஆக்கிரமிப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் இன் தாக்கம் சீனாவின் பொருளாதாரத்திற்கு பலத்த பின்னடைவைக் கொடுக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உலகின் இரண்டாவது பெரும் பொருளாதார வல்லரசான சீனாவில் ஏற்பட்டுள்ள பாதிப்பு சிறீலங்காவை கடுமையாக பாதிக்கும். ஏனெனில் சிறீலங்காவின் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் சீனாவின் முதலீடுகளிலும், சீன சுற்றுலாப் பயணிகளிலும் தான் தங்கியுள்ளது.

சீனாவின் சரிவு பல நாடுகளை பாதித்து வருகின்ற போதும், சிறீலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுக ஏற்றுமதி வலையத்தின் செயற்பாட்டிலும் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வருடத்திற்கான பொருளாதார வளர்ச்சியாக 4 விகித வளர்ச்சியை அடைவதை குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகின்றது புதிய சிறீலங்கா அரசு. அதற்கு ஏதுவாக வரிச் சலுகைகளை அறிவித்துள்ளது. கடந்த 20 வருடங்களாக நிமிர்த்த முடியாத பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் தான் தற்போதைய அரசின் ஆயுட்காலம் தங்கியுள்ளது.

அதேசமயம், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்காக பல சலுகைகளை பொது மக்களுக்கு அறிவித்து வருகின்றது சிறீலங்கா அரசு. தோட்டத் தொழிலாளர்களின் ஊதியத்தை எதிர்வரும் மார்ச் மாதத்தில் இருந்து 1000 ரூபாய்களாக அதிகரிக்கவுள்ளதாக சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்சா தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போதைய கடன் மீள் செலுத்தும் தொகை மற்றும் முன்னைய அரசு விட்டுச் சென்ற கடன்களின் கொடுப்பனவுகள் என 2167 பில்லியன் ரூபாய்கள் தேவையெனவும் அவர் தெரிவிக்கத் தவறவில்லை.

2018ஆம் ஆண்டு இடம் பெற்ற உள்ளுராட்சி சபை தேர்தலில் 340 சபைகளில் 230 சபைகளை கைப்பற்றியதும், பின்னர் அரச தலைவர் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைக் கைப்பற்றியதும், கோத்தபாயா அரசுக்கு சாதகமாக நிலையே தென்னிலங்கையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையை தக்க வைத்து பலமாற்றங்களை கொண்டு வந்து குடும்ப அரசியலை தக்க வைக்க போராடுகின்றது தற்போதைய அரசு.

புதிய அரசு பதவிக்கு வந்ததும் புலம்பெயர் தமிழ் மக்கள் குறிப்பாக கனடாவில் வசிக்கும் தமிழ் மக்கள் சிறீலங்காவில் முதலீடுகளை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்திருந்தது.

ஆனால் சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை தக்க வைத்து அதன் இன அழிப்புக்கு துணை போக தமிழ் மக்கள் விரும்பப் போவதில்லை என்பது ஒருபுறமிருக்க சிறீலங்காவிற்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தலாம் என்ற அச்சங்களும் புதிய அரசுக்கு உண்டு.

ஆனால் தாம் அதனை எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரையிலும் நிறுத்தப் போவதில்லை எனவும் எனினும் சிறீலங்கா அரசின் செயற்பாடுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும் எனவும் சிறீலங்கா மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியம் 2023ஆம் ஆண்டு வரையில் தனது சலுகையை வழங்கினாலும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது இந்த வரிச்சலுகை மூலம் சிறீலங்கா பெறும் நன்மைகளை குறைக்கும் என நம்பப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீளும் திட்டங்களை அல்லது ஆலோசனைகளை பல தரப்பினரிடம் இருந்தும் அரசு எதிர்பார்த்து வரும் இந்த நிலையில், சிறீலங்கா அரசு தனது படையினரின் செலவீனங்களை குறைக்க வேண்டும் என்ற ஆலோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், சிறீலங்கா அரசு தனது பாதுகாப்புச் செலவீனத்தை குறைக்கவில்லை என்ற தகவல் களை முன்வைத்துள்ளார் சிறீலங்கா அரசின் பொருளாதார ஆலோசகர் டானியல் அல்போன்ஸ்.

2017ஆம் ஆண்டின் செலவீனத்தில் 11 விகிதம் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. போர் நிறைவடைந்த பின்னர் சிறீலங்கா அரசு தனது பாதுகாப்பு செலவீனம் தொடர்பில் மீளாய்வு செய்யவில்லை, படையினரின் தொழில் நுட்பம் விரிவாக்கம் பெறவில்லை, மாறாக தரைப் படையும், ஆட்லறிப்படையினரும், கவசப் படையினரும் அதிக நிதிகளை உள்வாங்கி வருகின்றனர்.

அது மட்டுமல்லாது, சிறீலங்கா அரசு தனது படையினரை உட்கட்டுமானப் பணிகளில் அதாவது வர்த்தக நடவடிக்கைகள், கட்டிடங்களைக் கட்டுதல், நாட்டை அழகுபடுத்தும் நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபடுத்தி வருவதாக அறிக்கை தெரிவித்துள்ளது.

போர் இடம்பெற்ற 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1987 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியின் செலவீனம் சாராசரியாக 421 மில்லியன் டொலர்கள். ஆனால் இந்த தொகை 2007 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டு வரையில் 1716 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. இந்த காலப் பகுதியில் போர் நிறைவடைந்த பின்னரான 8 வருடங்களும் அடக்கம்.

அதாவது போர் நிறைவடைந்த பின்னரே அதிகளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. சிறீலங்காவின் படைத்துறைச் செலவீனம் 50 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட மியான்மார், 100 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் செலவீனங்களை ஒத்தது. அதாவது படையினரின் எண்ணிக்கையே அதிகளவு நிதியை உள்வாங்குகின்றது. இதன் தொகை 40 விகிதமாகும்.

தற்போது சிறீலங்கா படையினரின் எண்ணிக்கை 254,000 ஆகவும் பின்னிருக்கை படையினரின் எண்ணிக்கை 33,000 ஆகவும் உள்ளது. இந்த படையினரின் எண்ணிக்கை 30,000 ஆகவும், பின்னிருக்கை படையினரின் எண்ணிக்கை 170,000 ஆகவும் குறைக்கப்பட வேண்டும் என அறிக்கை கூறுகின்றது.

ஆனால் சிறீலங்கா அரசு ஏன் தனது படையினரின் எண்ணிக்கையை அதிகமாக வைத்து ள்ளது? ஏன் பாதுகாப்புக்கு அதிகளவு நிதியை செலவிடுகின்றது என்பதன் உள்நோக்கங்களை இந்த ஆய்வு தவறவிட்டுள்ளது.



சிறீலங்கா அரசின் உண்மையான நோக்கம் அதிகளவான படையினர் மூலம் நில ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு, காலாச்சார ஆக்கிரமிப்பு என்ற நடவடிக்கைகளின் ஊடாக தமிழ் மக்களின் தாயகத்தை சிதைத்து அவர்களின் தாயகக் கோட்பாட்டை அழிப்பதேயாகும்.

அதாவது 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் நேரிடையாக படையினர் மூலம் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை என்ற இன அழிப்பு தற்போது அதே படையினர் மூலம் மறைமுகமாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது சிறீலங்கா அரசின் நோக்கமும், செயலும் ஒன்று என்பதுடன், அது போரின் போதும், போரின் பின்னரும் மாறவில்லை. எனவே தான் பாதுகாப்புச் செலவீனமும் மாறவில்லை.

ஆனால் சிறீலங்கா அரசின் இந்த நோக்கத்திற்கு தற்போது தடையாக உள்ளது பொருளாதார சிக்கல் தான். அதில் இருந்து சிறீலங்கா மீண்டு விட்டால், தமிழினம் மிகப்பெரும் அழிவை சந்திக்கும் என்பதுடன், தமிழர்களின் தாயகமும் முற்றாக பறிபோகும் நிலையேற்படும், அதற்கு சிறந்த அண்மைய உதாரணமாக பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும், அதற்கான அமெரிக்காவின் அங்கீகாரத்தையும் கூறலாம்.

• • •



# தமிழரின் திறமையையும், தமிழ் தொன்மையையும் எடுத்துரைக்கும் தஞ்சை பெருவுடையார்

**கல்யாணி**

உலகில் தமிழ் மொழியும் தமிழரின் பண்பாடு, கலாச்சாரமும் தொன்மையானது என தற்போதைய ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. அத்துடன் அதற்கான சரியான காலத்தை வரைய றுத்துக்கூற முடியாத அளவிற்கு அவை மிகத் தொன்மையானவையாக காணப்படுகின்றன. இது ஒரு புறமிருக்க மற்றொரு புறம் தமிழையும், தமிழ் மக்களையும், அவர்களின் கலாச்சார, பண்பாடுகளையும் அழிக்கவும் அவற்றை திரிபு படுத்தி மாற்றி அமைப்பதற்கும் ஒருசாரார் முயற்சி செய்து வருகின்றனர். இதேவேளை இவற்றை எதிர்த்து தமிழை வளர்க்கவும், தமிழரின் தொன்மையை உலகறியச் செய்வதற்கும் தற்போதைய இளைய சமுதாயம் முயற்சி செய்து வருகின்றது. இவர்களின் முயற்சியினால் தமிழ் மீண்டும் தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழரின் கலை, சிற்பம், ஓவியங்கள் இன்றும் உலகில் எல்லோராலும் போற்றப்படும் ஒன்றாகவும், அதிசயிக்கத்தக்க ஒன்றாகவும் விளங் குகின்றது. அத்துடன் தமிழனின் கட்டடக் கலையின் பெருமையை எடுத்துக்கூறும் வகையில் அமைந்த ஓர் இடம் தான் இந்தியா, தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் அமைந் துள்ள தஞ்சைப் பெருவுடையார் கோவில் அல்லது தஞ்சைப் பெருங்கோவில் ஆகும். தமிழர்களின் கட்டிடக்கலைக்குச் சான்றாக விளங்கும் இக் கோவில் அற்புதமான கட்டிடக்கலை அம்சத்தைக் கொண்ட, இந்தியக் கோவில்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது.



இந்தியா, தமிழகம் தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள பெருவுடையார் கோவில் குடமுழுக்கு கடந்த 05ஆம் திகதி பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டது. முன்னர் 1997ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி குடமுழுக்கு நடத்தப்பட்டது. 23 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இந்தக் கோவில் இந்தியாவிலேயே வரலாற்று சிறப்பு மிக்க ஓர் சிவத்தலம் என்பதுடன், இதன் கட்டடக்கலை பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியப் படும் வகையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1000 வருடங்களைக் கடந்தும் புதுப் பொலிவுடன் விளங்கும் இந்த கோவில், சுற்றுலாத் தலமாகவும் விளங்கி வருகின்றது. இந்த தலம் திருவிசைப்பா பாடல் பெற்ற ஓர் சிவத்தலமாகும். இந்த கட்டடக் கலையை ஆராய்ச்சி செய்வதற்கும், பார்த்து ரசிப்பதற்குமாகவே உலக மக்கள் இங்கு வருவதுண்டு.

இந்தக் கோவிலின் அளவைப் பார்த்த மக்கள் இதை பெருங்கோவில் எனக் குறிப்பிட்டு வந்தமையால், அது தஞ்சைப் பெருங்கோவில் என தற்போதும் அழைக்கப்படுகின்றது.



குடமுழுக்கு நிகழ்வில் பெரும்பாலான அரசியல்வாதிகள் கலந்து கொள்வதை தவிர்த்தனர். பொது மக்கள் கலந்துகொண்ட நிகழ்வாகவே இருந்தது. இம்முறை தமிழில் மந்திரங்கள் உச்சரிக்கப்பட வேண்டுமென இந்து சமய அறநெறித்துறையினர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். இறுதியில் நீதி மன்றத் தீர்ப்பில் சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றில் மந்திரங்கள் உச்சரிக்கப்பட வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது. 1980 மற்றும் 1997ஆம் ஆண்டு நடை பெற்ற குடமுழுக்கு நிகழ்விலும் தமிழிலும், சமஸ்கிருதத்திலுமே மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன. இலட்சகணக்கான பக்தர்கள் குடமுழுக்கை காண குவிந்ததால் தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

காலை 7 மணி முதல் பக்தர்கள் குடமுழுக்கை காண கோவிலுக்குள் வரிசையாக அனுப்பப்பட்டனர். நேரம் செல்ல செல்ல எண்ணிக்கை கட்டுக் கடங்காத அளவுக்கு காணப்பட்டது. அவர்களை போலீசார் கடும் சோதனை செய்த பிறகே உள்ளே செல்ல அனுமதித்தனர். குடமுழுக்கையொட்டி தஞ்சைமாவட்டம் மட்டுமில்லாது தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 5500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



### கோயில் உருவான வரலாறு

சோழர்கள் ஆட்சி செய்த காலம் அது. சுந்தர சோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் கி.பி. 943ஆம் ஆண்டு ஐப்பசி மாத சதய நட்சத்திரத்தில் இரண்டாவது மகனாகப் பிறந்த அருண்மொழித்தேவன் (அருண்மொழிவர்மன்) என்பவரே இந்தக் கோவிலைக் கட்டியவராவார். 1004இல் கட்டத் தொடங்கி 1010ஆம் ஆண்டளவில் கட்டி முடிக்கப்பட்டது. இவர் ஓர் சிவ பக்தராவார். இவர் ராஜகேசரி என்ற பட்டப் பெயருடன் ராஜராஜ சோழன் மற்றும் 42 சிறப்புப் பெயர்களையும் பெற்றார். ஆனால் இப்போது ராஜராஜ சோழன் என்ற பெயரே எல்லோராலும் வழங்கப்பட்டு வருகின்றது. அவர் அரியணையில் ஆட்சி செய்த போதே இந்தப் பெயர் வழங்கப்பட்டது. ஆனால் அவர் சிவபாத சேகரன் என்ற பெயரையே விரும்பி ஏற்றுக் கொண்டார்.

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கைலாச நாதர் கோவிலைப் பார்த்ததும் ஆசைப்பட்ட அருண்மொழித்தேவன் தானும் ஓர் கோவிலைக் கட்ட வேண்டும் என எண்ணியே தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டினான்.

### கோயில் வடிவமைப்பு

தமிழனின் கட்டடக்கலைக்கு ஓர் சிகரமாக விளங்கும் இக்கோவில் 750 அடி நீளமும், 400 அடி அகலமும் கொண்ட கோட்டைச் சுவருக்குள் அமைந்துள்ளது. உள்ளே 240 அடி நீளமும், 120 அடி அகலமும் கொண்ட பிரம்மாண்ட நீள் சதுர நிலப்பகுதியைக் கொண்ட இக் கோவிலின் நடுப்பகுதியில், கருவறையின் மேல் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இது எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் விதமாக அமைந்துள்ளதுடன், மொத்தம், 13 நிலைகளையும் கொண்டுள்ளது. இதன் உயரம், 216 அடி ஆகும். ஒவ்வொரு நிலையின் உயரமும், சுற்றளவும் குறைந்து கொண்டே வந்து உயரத்தில், 'பிரமிட்' போன்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதுவே உலகிலேயே மிகப் பெரிய விமானம் என்று கூறப்படுகின்றது. இது தட்சிணமேரு என்று அழைக்கப்படுகின்றது. பீடம் தொடங்கி கலசம் வரை முழுவதும் கருங்கல்லினாலே கட்டப்பட்டுள்ளது. புராணங்களில் இது பொற்கிரி என்று போற்றப்பட்டுள்ளது. எட்டுத் திசைகளும் ஒவ்வொரு சந்நிதிகளையும் கொண்டுள்ளது. அத்துடன் 216 அடி உயரமுடைய கோவிலுக்கு அத்திவாரம் வெறும் 5அடி மட்டுமேயாகும்.

மரம், இரும்பு போன்ற பொருட்களைப் பயன்படுத்தாமல் முழுக்க முழுக்கக் கற்களை மட்டுமே கொண்டு இந்தக் கோவில் கட்டப்பட்டுள்ளதானது தமிழனின் கட்டடக் கலையின் நுட்பத்தையும், திறமையையும் எடுத்துக் கூறுகின்றது. இந்தக் கோவில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை என்று பல்வேறு சிறப்பு களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. 216 அடி உயரம் கொண்ட விமானக் கோபுரம் மற்றும் அதன் கட்டுமான அமைப்புகளை உலகப் பொறியியல் வல்லுநர்கள் பார்த்து வியக்கிறார்கள். இங்கு கருவறை மிகத்துல்லியமான சதுரமாக நான்கு பக்கமும் சிறிதும் பிசிரின்றி கட்டப்பட்டிருக்கிறது. ஜெர்மன் நாட்டு கல்வெட்டு அறிஞர் ஹல்ஸ், 1896இல் இங்குள்ள கல்வெட்டுகளை ஆய்வு செய்தார். ஒரு அங்குலம்கூட அளவில் பிழைக்காது

**தொடர்ச்சி 11ம் பக்கம்**

# விண்வெளியில் அதிக நாட்கள் தங்கிய ரஷ்யாவின் பெண் விண்வெளி அதிகாரி



ரஷ்யாவின் பெண் விண்வெளி அதிகாரி தனது நீண்ட நாள் பயணத்தை நிறைவு செய்து கடந்த வியாழக்கிழமை (06) பூமியை வந்தடைந்துள்ளார்.

கிறிஸ்ரினா கோச் என்ற விண்வெளி அதிகாரியே கடந்த 328 நாட்கள் அனைத்துலக விண்வெளி நிலையத்தில் தொடர்ச்சியாக தங்கியிருந்த பின்னர் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கசகிஸ்த்தான் பகுதியில் தரையிறங்கியுள்ளார்.

இதற்கு முன்னர் அமெரிக்காவைச் சேர்ந்த பெகி விற்சன் என்ற விண்வெளி அதிகாரி விண்வெளி நிலையத்தில் தொடர்ச்சியாக தங்கியிருந்து சாதனை புரிந்திருந்தார். ஆனால் அவரின் சாதனையை கிறிஸ்ரினா முறியடித்துள்ளார்.

எனினும் தொடர்ச்சியாக அல்லாது 2002 தொடக்கம் 2017 ஆண்டு காலப் பகுதியில் மூன்று தடவைகள் விண்வெளிக்குச் சென்று அதிக நாட்கள் தங்கியிருந்தது என்ற சாதனையை தற்போதும் விற்சன் தக்கவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது பயணத்தின் போது 5248 தடவைகள் பூமியை சுற்றிவந்த கிறிஸ்ரினா 223 மில்லியன் கி.மீ தூரம் பயணம் செய்துள்ளார். இது 291 தடவைகள் பூமியில் இருந்து சந்திரனுக்கு சென்று வரும் தூரத்திற்கு இணையானது.

# காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர்களை சிறையில் அடைத்துள்ளது இந்தியா



சுயாட்சியை இரத்துச் செய்து இந்தியாவுடன் இணைக்கப்பட்ட முஸ்லீம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட காஷ்மீர் மாநிலத்தின் முன்னள் முதலமைச்சர்கள் இருவர் 6மாத காலமாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்ட பின்னர் தற்போது குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஒமார் அப்துல்லா, மெகபூபா முப்தி ஆகியோரே பி.எஸ்.ஏ எனப்படும் கடுமையான பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சட்டத்தின் மூலம் விசாரணைகள் இன்றி ஒருவரை இரண்டு வருடங்கள் வரையில் சிறையில் தடுத்து வைக்க முடியும். காஷ்மீரின் சுயாட்சியை இந்தியா இல்லாது செய்தது தொடர்பில் போராட்டங்களை மேற்கொள்பவர்களை அடக்குவதற்கே இந்தியா இந்த சட்டத்தை பயன்படுத்தி வருகின்றது.

இந்த சட்டம் மிகவும் மோசமானது என அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. ஆனால் இந்த சட்டத்தின் மூலம் மேலும் பல அரசியல் தலைவர்களை சிறையில் அடைப்பதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

கிமாலயா பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட சுயாட்சி அதிகாரத்திற்கான 370 ஆவது சரத்தை இந்தியாவில் ஆட்சியில் உள்ள தேசிய இந்துத்துவக் கட்சி அரசு நீக்கியிருந்தது. அதற்கு முன்னரே கடுமையான சட்டங்களை அங்கு அது நடைமுறைப்படுத்தியிருந்தது.

அதன் மூலம் ஆயிரக்கணக்கான அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரை இந்தியப் படையினர் கைது செய்திருந்தனர். மனித உரிமை அமைப்புக்கள் அதனை கண்டித்திருந்தன. கடந்த 70 ஆண்டுகள் அங்கு ஆட்சி புரிந்த பாரூக் குடும்பத்தை சேர்ந்த பாரூக் அப்துல்லாவையும் இந்தியா கைது செய்திருந்தது. தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரான அவர் மூன்று தடவைகள் முதலமைச்சராக பதவி வகித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அப்துல்லா ஆறு மாதங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தியாவின் இந்த ஜனநாய விரோத நடவடிக்கையினால் சுற்றுலாத்துறை முற்றாக முடக்கமடைந்துள்ளதுடன், அரசியல் பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இது அங்கு வாழும் மக்களை அதிகம் பாதித்து வருவதாக அரசியல் அவதானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விவகாரம் தொடர்பில் இந்தியாவும் பாகிஸ்தானும் இரு தடவைகள் போரில் ஈடுபட்ட போதும் இரு நாடுகளும் பகுதியாகவே அதனை தக்கவைத்து வருகின்றன.

# போராட்டக்காரர்களை கைது செய்த கனடா காவல்துறை



வடக்கு பிரிட்டிஸ் கொலம்பியா பகுதியில் உள்ள தமது பூர்வீக நிலங்களில் இயற்கை வாயு குழாய்கள் அமைப்பதற்கு எதிராக ஜனநாயக வழிகளில் போராட்டம் மேற்கொண்டு வந்த மக்களை கனடா காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கலகம் அடக்கும் காவல்துறையினர் மற்றும் காவல்துறை நாய்கள் சகிதம் கடந்த வியாழக்கிழமை (06) சென்ற கனேடிய காவல் துறையினர் 6 போராட்டக்காரர்களை கைது செய் துள்ளனர்.

வெற்சுவேறன் பகுதி மக்களே 670 கி.மீ தூரத்திற்கு விளைநிலங்களின் ஊடாக 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்படும் எரிவாயுக் குழாய்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்கள் துப்பாக்கி வைத்துள்ளார்கள், அவர்களிடம் பொறிமுறை உள்ளது, அவர்கள் ஒரு போருக்கு தயாராகவே உள்ளனர் என இந்த கைது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள வெற்சு வேறன் பூர்வீகத் தலைவர் கூறியுள்ளார்.

மாகாண அரசுக்கும் அந்த பிரதேச பூர்வீக மக்களுக்கும் இடையில் இந்த விவகாரம் தொடர்பில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தை முறிவடைந்ததைத் தொடர்ந்தே கனேடிய காவல்துறை நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கை தொடர்பில் தகவல்களை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் காவல் துறையினரால் அச்சுறுத்தப்பட்டதுடன், அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதமும் கனேடிய காவல்துறை 12 செயற்பாட்டாளர்களை கைது செய்திருந்தது.

# நிக்கரகுவாவில் சூழல் பாதுகாப்பு தலைவர்கள் படுகொலை

நிக்கிரகுவாவில் உள்ள மழைக்காடுகளில் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் ஈடுபட்டு வந்த பூர்வீகத்தலைவர்கள் ஆறு பேர் ஆயுததாரிகளால் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் 10 தலைவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

போசாவாஸ் பயோஸ்பெயர் வனப்பகுதியினுள் நுளைந்த 80 பேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவினரே இந்த படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த பகுதியில் உள்ள வனப்பிரதேசங்களில் கனிம வளங்கள், கட்டிட வேலைகளுக்குரிய மர வகைகள் மற்றும் தங்கம் என்பன உள்ளதால் அந்த பகுதிகளில் உள்ள காடுகளை அழித்து கனிமங்களை அகழ்வதற்கும், மரங்களை வெட்டுவதற்கும் சில நிறுவனங்கள் முயன்று வந்துள்ளன.

ஆனால் அவர்களின் நடவடிக்கைகளை தடுத்து, வனத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தலைவர்களே தற்போது கொல்லப்பட்டும் கடத்தப்பட்டும் உள்ளனர்.

அமேசான் மழைக் காடுகளுக்கு அடுத்த நிலையில் நிக்கரகுவா பகுதியில் உள்ள மழைக் காடுகளே பெரிய மழைக்காடுகளாகும்.

# ஏழ்மையில் கல்வியைக் கைவிடும் சிறுவர்கள். இவர்கள்தான் ஈழத்தின் எதிர் காலமா..?

கோ- ரூபகாந்



தாயகத்தில் அரங்கேறிய யுத்தத்தின் வடுக்கள் சிறுவர்களின் கல்வியையும் பாதிக்கின்றது. யுத்த சூழ்நிலையில் தாய், அல்லது தந்தையை இழந்த சிறுவர்கள் அல்லது தாய் தந்தை இருவரையும் பறிகொடுத்த பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி இங்கு கேள்விக்குறியாகிவிட்டது.

குறிப்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பின்தங்கிய கிராமங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகபிரிவிலும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுகளிலும் மன்னார் மாவட்டம் முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரதேசங்களிலும் இருக்கும் பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் சிறுவர்களின் கல்வி நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் ஒன்று பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பம் அதாவது யுத்தத்தில் கணவனை இழந்த பெண் கூலிவேலைக்குச் சென்று அதில் ஈட்டப்படும் சிறிய வருமானத்தில் தனது பிள்ளைகளை பராமரிக்கும் குடும்பங்கள். மற்றயது யுத்தத்தில் தாயை பறிகொடுத்து தந்தையின் பராமரிப்பில் இருக்கும் பிள்ளைகள், அல்லது தாய் தந்தை இருவரையும் இழந்த நிலையில் உறவினரின் பராமரிப்பில் வாழும் பிள்ளைகள்.

இவர்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் முழுமையாக பராமரிப்பு கிடைக்காமல் கவனிப்பாரற்று பாடசாலைக்குச் செல்வதாக கூறிவிட்டு ஊர் சுற்றுவதும், குளங்களில் மீன் பிடிப்பதுமென தமது பொழுதைப் போக்கி விட்டு பாடசாலை விடும் நேரம் பார்த்து வீட்டுக்கு செல்லும் அனேகமான சிறுவர்கள் இன்றும் மேற்குறிப்பிடப்பட்ட பின்தங்கிய பகுதிகளிள் வாழ்ந்து வருகின்றனர்.

கல்வி கற்கவேண்டிய வயதில் மது, மற்றும் புகைப்பிடித்தல், மற்றும் தவறான பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொண்டு பாடசாலைக் கல்வியை இடைநிறுத்துகின்றனர். இவர்களின் எதிர்காலத்தைத் திட்டமிட்டு திருத்துவதற்கு என்ன செய்யலாம்..?

சற்று சிந்தித்துச் செயற்படுவோம். பாடசாலைக்கும் பெற்றோருக்கும் அல்லது பாதுகாவலருக்குமான உறவை வலுப்படுத்தும் முகமாக விழிப்புணர்வு, இவ்வாறான கிராமங்களை தெரிவு செய்து அவற்றில் வாழும் சிறுவர்களின் செயற்பாடுகளைச் சரியாக அவதானிப்பதற்கான குழுக்களை கிராம மட்டங்களில் உருவாக்குதல், மற்றும் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்களை பிள்ளைகளின் செயற்பாடுகளை அவதானிப்பதற்கான வழிமுறைகளை கையாழுதல், போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். கிராமங்களிலும் இவ்வாறான செயற்திட்டத்தை நடைமுறைச் சாத்தியப்படுத்துவதற்கு புலம்பெயர்ந்த உறவுகள் அனைவரும் உதவிக்கரம் நீட்டுவதற்கு முன்வர வேண்டும்.



தாயகத்தின் எதிர்கால சந்ததிகளின் கல்வி மேம்பாட்டுக்காக புலம்பெயர்ந்த உறவுகள் ஒவ்வொருவரும் கைகோர்த்து இந்த மகத்தான மனிதாபிமான சேவையில் உங்கள் பங்களிப்புடன் இணைந்து கொள்ளுங்கள். எதிர்காலத்தில் கல்வியில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள்.

## தமிழரின் ... தொடர்ச்சி..

ஒரேயளவாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டுள்ளார்.

இதேபோல் சிவலிங்கத்தின் மையப் பகுதியில் நேர் மேலாக சென்றால் அது கோபுரத் தின் மையப் பகுதியாக இருக்கும். விமானத்தின் மேல் முனையில் வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட கல் காணப்படும். விமானக் கோபுரத்தின் உட்புறம் உள்ள மேல் அறை ஒன்றில் 108 கர்ணங்கள் கொண்ட பரத நாட்டியச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கீழ்த் தளத்தில் அருண்மொழித் தேவன் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் உள்ளன. மேலும், மழை நீர் சேகரிப்பு வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நுழைவு வாயிலில் உள்ள 45 அடி உயரம் கொண்ட நிலைக்கால்கள் ஒரே கல்லால் கட்டப் பட்டவை.

இந்தக் கோவிலில் உள்ள ஓர் சிறப்பம்சம் என்னவெனில், எல்லாக் கோயில்களிலும் கோபுரங்களே உயரமாகக் காணப்படும். ஆனால் இங்கு மூலவர் சந்நிதான கருவறையின் விமானத்தைப் பெரிதாகவும், கோபுரத்தை சிறிதாகவும் கட்டியுள்ளனர். இங்கு இருக்கும் சிவலிங்கம் 6 அடி உயரம், 54 அடி சுற்றளவு கொண்ட ஆவுடையார், 23 அரை அடி உயரம் கொண்ட லிங்கம் ஆகும்.

பிரமாண்ட கோவிலைப் போலவே 80 தொன் எடை கொண்ட ஒரே கல்லால் செதுக்கப்பட்ட நந்தி சிலை கோவில் முன்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 14மீற்றர், நீளம் 7மீற்றர், அகலம் 3 மீற்றர் ஆகும்.

### தமிழ் பெருமையை எடுத்துக் கூறும் அம்சங்கள்

கருவறை உயரம் 216 அடியாகும். உயிர் மெய் எழுத்துக்கள் 216இந்தக் கருவறையில் இருக்கும் சிவலிங்கம் 12 அடி உயரமுள்ளது. உயிர் எழுத்துக்கள் 12இது ஒரே கல்லால் செய்யப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சிவலிங்க பீடத்தின் உயரம் 18 அடியாகும். மெய் எழுத்துக்கள் 18 ஆகும். சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் உள்ள இடைவெளி 247 அடி தமிழின் மொழியின் மொத்த எழுத்துக்கள் 247 ஆகும் இந்த அளவுகள் தமிழ் மொழியை ஒத்திருப்பதாக தமிழ் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இங்கு காணப்படும் 107 கல்வெட்டுக்களும் தமிழ் மொழியிலேயே அமைந்துள்ளதானது தமிழை எடுத்துக் கூறும் ஒரு சிறப் பம்சமாகக் காணப்படுகின்றது. இந்தக் கல்வெட்டிலே கோவிலைக் கட்டியவர்கள், கோவில் கட்டுவதற்கு உதவி புரிந்தவர்கள் மற்றும் கோவில் கட்டடப் பணியில் ஈடுபட்டவர்கள் அனைவரது பெயர்களும் பொறிக்கப் பட்டுள்ளது. இறுதிப் பேராக அருண்மொழிச் சோழனின் பெயர் ராஜராஜ சோழன் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலை 1987இல் யுனெஸ்கோ நிறுவனம் உலக மரபுச் சின்னம் என்று அறிவித்தது. இதையடுத்தே வெளிநாட்டவர்களும், மதவேறுபாடின்றி அனைத்து தரப்பினரும் இந்தக் கோவிலுக்கு வருகை தருகின்றனர்.

### இந்தக் கோயில் பற்றிய மூட நம்பிக்கைகள்

இந்தக் கோவில் பற்றி பல மூடநம்பிக்கைகள் பரவி வருகின்றன. இந்தக் கோவிலுக்கு செல்லும் அரசியல்வாதிகள் பதவிகளை இழப்பதுடன், அவர்களின் உயிர்களுக்கும் ஆபத்து நேரும் என்பது பலரின் நம்பிக்கையாகவும் உள்ளது. இதன் காரண மாகவே கோவில் குடமுழுக்கு நடைபெற்ற போது, பெரும்பாலான அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளவில்லை.

மற்றும் இக்கோயிலின் நிழல் நிலத்தில் விழாது என்பதும் ஒரு நம்பிக்கை. ஆனால் இந்தக் கோபுரத்தின் நிழல் கீழே விழும் என்பதே அறிவியல் கருத்தாகவும் இருக்கின்றது.

இந்தக் கோவில் தமிழர்களின் பெருமையையும், தமிழனின் கட்டடக்கலை நுட்பங்களையும் கலை, சிற்பம், ஓவியம் என அனைத்தையும் போற்றும் அளவில் அமைந்துள்ளது என்பது நாம் பார்த்தவையே. ஆனால் தற்போது மொழித் திணிப்பு என்பது எல்லா நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இதற்கு ஒத்ததாகவே இக்கோவிலில் தமிழில் வழிபாடு செய்வதும், அர்ச்சனைகள் செய்யப்படுவதும் தடுக்கப்படுகின்றது. சமஸ்கருத மொழியில் நடத்தப்பட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டு வரை இந்தக் கோவிலின் பெருமையை பெரிதாக எவரும் கருதவில்லை. அதன் பின்னரே இந்தக் கோவிலின் கட்டடக்கலை, தமிழின் தொன்மை, கலை, கலாசார தொன்மை பற்றி அறிவதற்கு பலரும் முன்வந்தனர். இதனையடுத்தே தஞ்சைப் பெருவுடையார் என்பது தஞ்சை பிரகதீஸ்வரர் என அழைக்கப்பட்டது. அருண்மொழித்தேவன் ராஜராஜ சோழன் என அழைக்கப்பட்டான். தமிழ் மறைக்கப்பட்டு சமஸ்கிருதம் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என கருதப்பட்டது.


ஆனால் தற்போதுள்ள தமிழ் ஆர்வலர்களும், சமூகசேவகர்களும் இந்தக் கோவில் தமிழரின் பண்பாட்டைக் கொண்டாடும் கோவில் எனவும், கலை, சிற்பங்கள் தொன்மையானது எனவும் பதிவு செய்வதற்கு முயற்சித்து வருகின்றனர். தமிழர்களின் கட்டடக்கலையைப் போற்றும் கோவிலான தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் தமிழில் வழிபாடு செய்யப்பட வேண்டும் என்பது தமிழர்களின் உரிமை. இதை மத்திய அரசு அனுமதிக்க வேண்டியது அவர்களின் கடமை என்பது தமிழர்களின் வாக்காக உள்ளது.

இந்தியாவில் உள்ள சில கோவில்களில் தமிழில் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகின்றது. அதேபோல ஈழத்தில் இணுவிலில் அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் கோவில், சுவிற்சலாந்து பெர்ன் அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் கோவில் என்பவற்றில் தமிழில் வழிபாடு இடம்பெறுவது குறிப்பிடத் தக்கது.

• • •

# அறிமுகப்படுத்தப்படும் புதிய நோய்களும் பயமுறுத்தும் செய்தி ஊடகங்களும்

பரமபுத்திரன்



தற்காலத்தில் குறித்த கால இடைவெளிக்கொரு தடவை புதிய நோய் ஒன்று அறிமுகப் படுத்தப்படும். பொதுவாக இவை வைரசு நோய்கள். அந்த வரிசையில் இந்த ஆண்டு அறிமுகமாகியுள்ள வைரசு கொரோனா வைரசு. வைரசு என்பது ஒன்றும் புதிதல்ல. ஆனால் மக்களுக்கு விழிப்பூட்டுவதாக கூறிக்கொண்டு செய்தி ஊடகங்களும் மருத்துவமும் மக்களை பயமுறுத்துவதில் குறியாக இருக்கின்றது. தாங்கள் என்ன செய்கின்றார்கள் என்று ஊடகங்களும் தெரிந்து கொள்ளவில்லை. மருத்துவர்களும் புரிந்து கொள்ளவில்லை. இன்று வேறுபட்ட நோய்களை இனம்காட்டி, அதற்கு அறிகுறிகள் கூறி, அந்த நோயின் தாக்கங்களை எடுத்துச் சொல்லி மக்களை அச்சத்தின் உச்சத்திற்கு அழைத்துச் செல்கின்றார்கள் செய்தியாளர்கள். இதற்கு உதவியாக மருத்துவர்கள் கூறுவதாக சொல்லிக் கொள்கின்றார்கள். மக்களுக்கு உதவுவதாக எண்ண வைத்து மக்களை மனநோயாளிகளாக மாற்றுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனும் அருகில் அமர்ந்திருப்பவனை ஏக்கத்துடன் பார்த்து ஏதாவது நோய் ஒன்றை என்மேல் ஏற்றிவிட்டு செல்வானோ என்ற கலக்கத்துடன் நிற்கின்றான். மறுபுறத்தில் “மூடு முகம், போடு தடுப்பூசி” என்று அறிவுறுத்தல்கள் வழங்குகின்றனர். அன்றாடம் உழைத்துக் களைத்து வாழும் மக்கள் மிரண்டு பயந்து அலைகின்றனர். முகமூடிகளை போட்டுக் கொண்டு சுற்றுகின்றனர். காரணம் நாமோ படிக்கவில்லை, ஆனால் படித்தவர்கள் நோய்கள் தொடர்பாக சொல்கின்றார்கள், எனவே அது சரிதான் என்று முழுமையாக நம்புகின்றார்கள். இது சரியா?

இறப்பு என்பது உறுதியானது. ஆனால் நாம் இறந்து விடுவோம் என்ற பயமே எப் போதும் மனிதர்களை கலங்க வைக்கிறது. அது வாழ வேண்டும் என்ற விருப்பு. அதாவது உயிர் மேல் கொண்ட ஆசை. இந்த உலகின் மீது கொண்ட மோகம். இதுதான் ஒவ்வொரு மனிதனையும் நோய்க்கு அச்சமுற வைக்கின்றது. இருந்தாலும் திடீர் சாவு மனிதனை பயமுறுத்துவதில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக வீதி விபத்துகளால் நிகழும் இறப்புகளை கூறலாம். ஒரு வீதி விபத்து நடைபெற்றால் அதற்கு காரணம் வீதியில் குறைந்த பட்சம் ஒருவர் அல்லது இருவரும் வீதி விதிகளை மீறியுள்ளனர். எனவே விதி மீறல்தான் விபத்துக்கு காரணம். வீட்டிலிருந்து புறப்பட்ட எத்தனை பேர் வீதியிலே செத்து மடிந்திருக்கிறார்கள். வேலைக்கு புறப்பட்டவன், வேலை முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவன், வீட்டில் மனைவி பார்த்துக் கொண்டிருப்பாள், பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருக்கும் என்று வீடு நோக்கி ஓடியவன் எனப்பலர் வீதி விபத்தில் இறந்திருக்கின்றனர். அவர்களுக்காக எவரும் கவலைப்படுவதில்லை. அவர்கள் உயிர்களை பெறுமதி மிக்கதாக கொள்வதில்லை. வேகத்தை கூட்டி ஓடாதீர்கள், வாகனம் ஓடும் போது வேறு செயற்பாடுகள் செய்யாதீர்கள், கைபேசி பயன்படுத்தாதீர்கள் என்பதை எத்தனை பேர் கவனத்தில் எடுக்கின்றோம். வீதி விதிகளை படிக்கின்றோம். சாரதி அனுமதிப் பத்திரம் பெறு கின்றோம். எத்தனை பேர் மற்ற மனிதர்களை காக்க வேண்டும் என்று நினைத்து வாகனம் செலுத்துகின்றோம். ஆனால் கொரோனா வைரசு என்றதும் எங்களை பாதுகாக்க எப்படி அலைகின்றோம். பயத்தில் உறைகின்றோம். எம்மைப் போல் பிறரையும் நேசிக்கின்றோமா?

தமிழில் “உடன் பிறந்தே கொல்லும் வியாதி” என்று ஒரு தொடர் உண்டு. அதாவது ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது அவனை கொல்வதற்கே அவனுடன் ஒரு வியாதி பிறந்திருக்கும். எனவே உடன் பிறந்த வியாதி தாக்கி மனிதன் இறப்பது உறுதி. இதனைவிட மனிதர்களை பொறுத்த வரை இரு வழிகளில் நோய்கள் வருகின்றன. ஒன்று உடலுக்கு தேவையான போசணைப் பொருட்கள் அதாவது உணவுப் பற்றாக்குறை காரணமாக வரும் குறைபாட்டு நோய்கள், மற்றையது நோயாக்கிகள் எனப்படும் பற்றீரியா, பங்கசு, வைரசு போன்ற நோய்க் கிருமிகள் மூலம் மனிதனுக்கு வரும் நோய்கள். பொதுவாக மனிதனுக்கு வரும் நோய்கள் எங்களை துன்பப்படுத்தும். இது உடல், உள பாதிப்புகளை தரும். உடலை பொறுத்தவரை உடல்வலி, காய்ச்சல், சுவாச குழப்பம், தலைவலி போன்ற உபாதைகளை உடலுக்கு கொடுக்கலாம். அடுத்து உடல் அங்கங்கள் பாதிக்கப்படுதல், நரம்புகள் தாக்கப்படுதல் போன்ற நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தலாம். சிலவேளைகளில் இறப்பையும் தரலாம். ஆனால் முந்தைய காலங்களில் தொற்று நோய்கள் தாக்கி மக்கள் கூட்டம் கூட்டமாக இறந்துள்ளனர். வாழ்ந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். அன்று தொடர்பாடல் ஊடகங்கள் இந்தளவுக்கு இல்லை. அதனால் செய்திகள் பரப்பப்பட்ட அளவு குறைவு. மருத்துவம் உயர் நிலையில் இல்லை. மக்கள் சுகமாக வாழந்தார்கள். இன்று இறந்தவர்களின் எண்ணிக்கையை கணக்குக்காட்டி மக்களை ஏங்கச் செய்கின்றனர். உயிர்ப் பயம் காட்டி மருத்துவர்களிடம் ஓட வைக்கின்றனர். மருத்துவர்களும் தங்கள் பங்குக்கு மக்களை பயப்பட செய்கின்றனர்.

தாயின் வயிற்றில் கருக்கொள்ளும் சிசு வயிற்றினுள் முற்று முழுதாக தாயால் பராமரிக்கப்படுகின்றது. பிறந்த குழந்தை தாயின் பால் குடிக்கும் போது தனது உடலுக்கு தேவையான போசணை மற்றும் நோய் எதிர்ப்பு ஆற்றல் என்பவற்றை பெற்றுக் கொள்ளும். சிறு பிள்ளைகளுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைவாக இருக்கும். ஆனால் பிள்ளை வளர வளர உடல் வளர்தல் மட்டுமல்ல நோய் எதிர்க்கும் ஆற்றலும் வளரும். இருந்தாலும் நோய் எதிர்ப்பு ஆற்றல் தொடர்ந்து வளராது. குறித்த காலம் வரை வளரும். அதன் ஆற்றல் ஏறத்தாழ எமது நாற்பது வயது வரை உச்சமாக இருக்கும். அதன் பின் நோய் எதிர்க்கும் ஆற்றல் குறைந்து செல்லும். அதாவது நோய்களில் இருந்து பாதுகாக்கும் தன்மை குறைந்து செல்ல ஆரம்பிக்கும். இதைவிட வாழும் காலம் முழுவதும் நோயாக்கிகள் எங்களை தாக்கியபடியே இருக்கும். இதனை தடுப்பதற்கு நாங்கள் மருத்துவரை நாடுவோம். அவர்கள் சில மாத்திரைகள் தருவார்கள். எமக்கு மகிழ்ச்சி மட்டுமல்ல நோயும் குணமடையும் என்று நம்புகின்றோம். எப்போது நாம் மாத்திரைகளை உண்ண ஆரம்பிக்கின்றோமோ அதன்பின் மாத்திரைகளில் இருந்து எம்மால் விடுபட முடியாது என்பதும் உண்மையான செய்தி.



நோய் என்பது புவியில் தோன்றிய எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. அதாவது தாவரம், விலங்குகள் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் என எல்லாமே நோயால் தாக்கப்படுகின்றன. இந்த நுண்ணுயிர்கள் எமக்கும் நோய் வழங்கும் காரணிகள். நுண்ணுயிர்கள் மனிதனுக்கு ஏற்படுத்தும் மிகப்பெரிய பாதிப்பு நோய்களை தருவது தான். உண்மையில் நுண்ணுயிர்கள் என்பவை கண்ணுக்கு தெரியாதவை. அதாவது நுணுக்குக் காட்டி மூலம் அவதானிக்கப்படுபவை. அதிலும் இருவகை நுணுக்குக்காட்டிகள் உண்டு. ஒன்று ஒளி நுணுக்குக்காட்டி, மற்றது இலத்திரன் நுணுக்குக்காட்டி. இலத்திரன் நுணுக்குக்காட்டி உயிர் அல்லாத பொருள்களை அவதானிக்கும் ஒன்று. அதாவது உயிருள்ளவை எதனையும் இதன் மூலம் அவதானிக்க முடியாது. வைரசுக்கள் இலத்திரன் நுணுக்குக்காட்டிகளிலேயே அவதானிக்கப்படுகின்றன. அதேவேளை சிறப்பு பயிற்சி பெற்றவர்கள்தான் இலத்திரன் நுணுக்கு க்காட்டிகளை கையாள முடியும். அவர்கள்தான் இந்த வைரசுக்கள் தொடர்பாக அறிவிக்கின்றனர். இருப்பினும் வைரசுக்கள் உருள்ளவை என்றும் சொல்ல முடியாது, உயிரற்றவை என்றும் சொல்ல முடியாது இரண்டுக்கும் இடைப்பட்டவை. பொதுவாக வைரசுக்களை மருந்துவகைகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தல் கடினம். எனவே கொரோனா வைரசும் இந்த வகைக்குள் வருகின்றது. இது ஒரு புதிய வைரசு அல்ல. ஏற் கனவே இருந்த ஒன்று. இப்போது பெரிதாக பேசப்படுகின்றது. எங்கள் உடலினுள் புகும் வைரசுக்களை ஏன் கட்டுப்படுத்த முடிவதில்லை?. இவை ஏன் நோய்களை ஏற்படுத்துகின்றன?.

**தொடரும்..**